RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22413

OPEN ACCESS

# நடுகல் உணர்த்தும் பழந்தமிழரின் வாழ்வியல் நம்பிக்கைகள்

## கு. ஆறுமுகம் [அ, *]

[அ] தமிழ்த்துறை ஸ்ரீ ராகவேந்திரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிதம்பரம்-608102, தமிழ்நாடு, இந்தியா

# The Life Beliefs of Palandamizhar Expressed by Nadukal (A Sepulchral Stone or Monument)

## G. Arumugam [a, *]

[a] Department of Tamil, Shree Ragavendra Arts and Science College, Chidambaram-608102, Tamil Nadu, India

* Corresponding Author: arumugamjeevi15@gmail.com

Received: 04-04-2022
Revised: 27-08-2022
Accepted: 11-09-2022
Published: 08-10-2022

Check for updates

### ABSTRACT

The various kinds of art, literature, politics, culture, faith, civilization, etc., of the ancient Tamil people, have been known from the manuscripts, inscriptions, coins, copper plates, etc., found in different parts of the country. The various fields of work have a permanent origin in the literary world, giving shape to the known sources. It is the immortal literature created by the ancient Tamil people who have established that image and is so popular. This study is intended to examine the ancient middle stones that can be discovered through these inscriptions and the various soil-based beliefs that are intertwined with the lives of the ancient Tamil people associated with them.

**Keywords:** Kinds of worshipping, Origin of Nadukal, Literary Words, Cultural Glossary, Nadukal Establishment

## முன்னுரை

நாட்டின் பல்வேறு இடங்களில் கண்டறியப்பட்ட ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள் போன்றவற்றின் வாயிலாக, பழந்தமிழ் மக்களின் பல்வேறு வகையான கலை, இலக்கியம், அரசியல், பண்பாடு, நம்பிக்கை, நாகரிகம் போன்றவைகள் அறியப்பட்டுள்ளன (Sakthivel, 1984). அறியப்பட்ட சான்றாதாரங்களுக்கு உருகொடுத்து பல்வேறு படைப்புகளம் இலக்கிய உலகில் நிலைத்த தோற்றம் பெற்றுள்ளன. அத்தோற்றம் நிலைப்பெற்றதும் நீங்காப் புகழ் பெற்றும் இருப்பதும் பழந்தமிழ் மக்கள் படைத்தளித்த சாகாவரம்பெற்ற இலக்கியங்களே. அவ்விலக்கியங்கள் வாயிலாக அறியலாகும் தொன்மை வாய்ந்த நடுகற்களையும், அவை தொடர்பான பழந்தமிழ் மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த பல்வேறுவிதமான மண்சார்ந்த நம்பிக்கைகளையும் ஆராயும் முகமாக இவ்வாய்வு அமைகிறது.

## நடுகல் - சொல்லாய்வு

சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்குப் பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல்லே நடுகல் ஆகும் (Gandhi, 1980). இதனை அகநானூறு, "நட்டபோலும் நடாஅ நெடுங்கல்" எனக் குறித்துள்ளது (Subramanian, 2009). தமிழில் நடுகல் என்பது, வீரகலு அல்லது வீரசிலாலு எனக் கன்னட, தெலுங்கு மொழிகளில் கூறப்பட்டுள்ளது. மேற்கு இந்தியாவில் நினைவுக்கற்களைப்

பலியா (Paliya That is Survivours) என்றும் கம்பியா, (Kanbia or Pillars) சர (Chara Gravestone) என்றும் அழைக்கின்றனர் (Krishnamoorthy, 2004).

## நடுகல் தோற்றம்

தொல்காப்பியர் நடுகற்களைக் குறிப்பிடும்போது உருவத்தையோ எழுத்தையோ குறிப்பிடவில்லை. ஆயின் சடங்குகளைக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் ஆநிரைப் போர்களில் மாண்டவர்களுக்கே மிகுதியாக நடுகற்கள் எடுக்கப்பட்டன என்கிறார். ஆநிரைப் போராகிய வெட்சித் திணையில்தான் நடுகல் குறித்தும் குறிப்பிடுகிறார். நடுகல்லை ஆறுநிலைகளாகத் தொல்காப்பியர் கூறியதை, இளம்பூரணாரும் நச்சினார்க்கினியரும் தங்கள் கால உலகியல் மரபுடன் தொடர்புபடுத்தி விளக்கியுள்ளனர் (Krishnamoorthy, 2004).

"காட்சி கால்கோள் நீர்படை நடுதல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று வகையிற் கல்லொடு புணர"

காட்சி என்பது - கல் காண்டல் என்பதுடன் உறவினர்கள் கூடி இறந்தவர் உடம்பினை அடக்கம் செய்வதும் புலம்புவதும் ஆகும் (Ilampuranar, 1969).

கால்கோல் என்பது - இறந்தவர் ஐம்பூதங்களோடு கலத்தல் அல்லது இயற்கை எய்தியதைக் கூறலாம்.

கால் என்பதற்கு - காற்று என்றும் பொருளாதலால் காற்றோடு கலத்தல் என்பதுமாகும். கல்லைக் கொண்டு வருதல் என்றும் கூறலாம்.

நீர்படை என்பது - இறந்த வீரனைக் குளிப்பாட்டி- நீராட்டியதையும் குறிக்கும்.

நடுதல் என்பது - கல்லை வீரனாகப் பாவித்து நடுதல் ஆகும்.

பெரும்படை என்பது - வீரன் முன்பு பெருஞ்சோறு வைத்து வழிபடுவது.

வாழ்த்தல் என்பது - இறந்தவீரனின் கீர்த்தியைப் போற்றவது. வீரன் சொர்க்கத்திற்குச் செல்வதை வாழ்த்துவதாகக் குறிப்பிடலாம். தங்களைக் காக்குமாறு நடுகல் வீரனை வேண்டுவதாகவும் வாழ்த்துவதாகவும் குறிக்கலாம் (Ilampuranar, 1969).

புறப்பொருள் வெண்பாமலை கூறும் கல்கொண்டு புகுதல் என்பது கல்பதுக்கை அல்லது கல்திட்டை எனலாம். தொல்காப்பியர் குறிப்பிடும் நடுகல் தொடர்பான ஆறு நிலைகளும் பெருங்கற்காலச் சின்னங்களாக கல்திட்டை, கல்பதுக்கை, குத்துக்கல், நெடுங்கல் ஆகியவை நடுகல்லுக்கு ஓரளவு பொருந்தும் (Krishnamoorthy, 2004). தொல்காப்பியர் நடுகல் வழிபாட்டை போற்றுவதற்குக் காரணம் மக்களிடையே பெருவழக்காக அது இருந்ததாலேயாகும்.

## திருவள்ளுவரும் நடுகல் வீரனும்

"முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

அரசர், குதிரை அல்லது யானை மீது அமர்ந்தபடி போரிட்டு இறந்துபட, விமானத்தில் அமர்ந்து தேவமங்கையருடன் இசைவாணர் இசை மீட்டப்படி வர சொர்க்கம் செல்லும் காட்சியை இக்குறளுடன் பொருந்தி தெளிவுறுலாம் (Parimelazhakar, 1950).

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை

முன்னின்று கல்நின்றவர்"

என்ற குறளில் போரில் இறந்த பகைவன், நடுகல் ஆகி இருப்பதாக வீரன் கூற்றாக வள்ளுவர் குறிப்பிடுவதனை அறியலாம். நடுக்கல்லைச் சாதாரணக் கல்லாகக் கருதக்கூடாது (Parimelazhakar, 1950). தெய்வ வடிவமாகவே கருதவேண்டும் (Krishnamoorthy, 2004). வீரயுகத்தில் நினைவுச் சின்னமாகக் கருதப்பட்ட ஒன்று காலப்போக்கில் வழிபாடாக மாற்றம் பெற்றதனையே இது காட்டுகிறது.

## கல்லா - கணவனா?

'கல்லானாலும் கணவன்', 'புல்லானாலும் புருஷன்' என்ற பழமொழி நடுகல் வழிபாட்டின் அடிப்படையில் உருவான பழமொழியாகும் (Krishnamoorthy, 2004). இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்படும் நடுகல். கல்லாக இருப்பினும் அது கற்புடைய மனைவிக்குக் கணவனே ஆகும். அதேபோல் இறந்துபட்ட கணவனுடைய சமாதியில் முளைக்கும் புல்லும் வழிபடும் தன்மையுடையதாகும். அதாவது, இறந்துபட்ட வீரனை, வீரனின் மனைவி வழிபடுவாள் என்பதே இப்பழமொழியின் கருத்தாகிறது. இப்பழமொழியின் உண்மையான பொருள் தெரியாமல் ஆடவனை இழித்தும் பழித்தும் பேச இப்பழமொழியை மக்கள் இன்றும் சமூகத்தில் பயன்படுத்தி வருவது வருந்தத்தக்கதாகும்.

## பள்ளிப்படை

நடுகல் வழிபாடு அல்லது அரசன் வழிபாட்டிலிருந்தே கோயில் என்பது உருவாகி இருக்க வேண்டும். அரசன் வாழும் இடம் கோயில். அவன் இறந்தபின் 'அவனுக்காக எடுக்கப்படுவது பள்ளிப்படைக் கோயிலாகும்' (Krishnamoorthy, 2004).

## கோயில் - சொல் ஆய்வு

"கோ - அரசன்"

"இல் - இல்லம்"

கோயில் என்பது அரசனுடைய இல்லம் என்பது பொருள்.

நடுகற்கள் சாதாரண வீரர்களுக்கு எடுக்கப்பட்டதாகவும் பள்ளிப்படைகள் அரசர்களுக்கு எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடுவர் (Vanamamalai, 1987). சிதம்பரத்தை ஒட்டிய பூதகேணியருகே 'பள்ளிப்படை' என்ற ஊரின் பெயர் இன்றும் வழக்கத்தில் இருந்து வருவது நோக்கத்தக்கதாகும்.

கோயில் என்னும் சொல் இன்று கடவுள் உறையும் இடத்தை மட்டும் குறிக்கிறது. சங்க காலத்தில் அரசனின் அரண்மனையை மட்டுமே குறித்தது.

"வாயில் விடாது கோயில் புக்கு, எம்

பெருங்கோக் கிள்ளி கேட்க"

சங்க காலத்தில் மன்னனைக் கடவுள் என்றும், அவன் வாழ்விடத்தை கோயில் என்றும் அழைத்தனர் (Subramanian, 1996).

## நடுகல்லும் - ஆவி வழிபாடும்

தொன்மைச் சமயம் தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே 'ஆவி வழிபாடு' (Animism) ஆகும். இந்தக் கோட்பாட்டை 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில மானிடவியலறிஞர் வகுத்தார் (Edvard Parnat Tylor, 1832-1917). ஆவியுலகக் கோட்பாட்டின் மையக்கருத்தை டைலர் குறிப்பிடும்போது, சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார் (Tylor, 1871).

தொன்மை மக்கள் வாழ்வுக்கும் இறப்புக்கும் ஆவிகளே காரணம் என நம்பினர். மனிதன் இறக்கும் போது கண்ணுக்குப் புலப்படாத 'சக்தி' (ஆவி) உடலிலிருந்து வெளியேறுவதனாலே அவர் இறக்கிறான் என்றும், அந்தச் சக்தி உடலினுள் இருக்கும்வரை உயிருள்ளவனாக இருக்கிறான் என்றும் நம்பினார்கள் (Bakthavachala Bharathi 2021).

இறந்தவரை புதைக்கும்போதோ எரிக்கும்போதோ தமிழ் மக்கள் அவரவர் குலத்திற்கேற்றபடி பல்வேறு சடங்குகளைச் செய்வார்கள். இச்சடங்கினைச் செய்த பின்னர் இறந்தவர்தம் ஆவி சில நாட்கள் வரை வீட்டிற்கு வந்து செல்கிறது என இன்றும் நம்புகின்றனர். இதன் காரணமாகவே பதினாறாம் நாள் காரியம் முடியும்வரை வீட்டில் இறந்தவருடைய உடைகளையும் உடைமைகளையும் வைத்துத் தினமும் தவறாமல் விளக்கேற்றி வைத்து வழிபடுவர். அதனருகாமையிலேயே மணலினையம் பரப்பி வைப்பர். ஒரு சிறிய பாத்திரத்தில் நீரையும் வைப்பர். சில நாட்களில் மணலின் மேற்பரப்பு கலைந்திருக்கும் அல்லது வைத்த நீரின் அளவு குறைந்திருக்கும். இறந்தவர் வீட்டிற்கு வந்துபோனதாலே அது நிகழ்ந்தது என மக்கள் நம்புகிறார்கள். இதன் தொடர்ச்சியாகவே இறந்தவர்ன் உருவத்தினை கல்லிலே செதுக்கி அதனை வழிபட்டு வந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

ஆவியுலக நம்பிக்கை

↓

நடுகல் வழிபாடு

↓

பலகடவுள் வழிபாடு

↓

(இன்றுள்ள) ஒரு கடவுள் வழிபாடு

என்ற வரிசையில் மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். வீரத்தைப் போற்றும் பண்பும் ஆவிபற்றிய நம்பிக்கையுமே நடுகல் நாட்டுவதற்கு அடிப்படையாயின. வீரத்தினையே உயர்வாகக் கருதியும், வீரயுகத்தில் தோன்றிய நடுகல் எடுக்கும் வழக்கம் காலப்போக்கில் வேறு சில சமுதாய மதிப்புப் பெற்ற மனிதப் பண்புகளுக்கும் சிறப்பளித்தமையினை நட்பு, மானம், புகழ் ஆகியவற்றிற்காக உயிர்நீத்து நடுகல்லான மாந்தரின் வாழ்வியல் நிகழ்வுகள் உணர்த்துகின்றன. நடுகல் எடுக்கும் வழக்கத்தில் ஏற்பட்ட இடமாற்றம் ஆவிக்கொள்கைக்கு வழியமைத்ததனை சமூதாய மானிடவியல் ஆய்வாளர் குறிப்பிடுகிறார் (Frezer, 1973). இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம் என்றும், அங்குள்ள ஓர் பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம் என்பதும் உலகெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படகூடிய ஒன்றாகும் (Vanamamalai, 1973).

## சடங்குகளும் நம்பிக்கையும்

சடங்குகள் அழகியல் உணர்வுகளை உள்ளடக்கியவை. லெஷிஸ்ட்ராசின் முதன்மைச் சீடராக விளங்குகின்ற Edmand Leech 1968 'சடங்கானது நடத்தை முறைகளின் வெளிப்பாடு' என்பார். வேறு சிலர் சடங்கென்பது நடையியல் குறியீடு சார்ந்தது என்பர். சடங்குகள் சில சூழல்களில் தனிமனிதர்களால் நிகழ்த்தப்பட்டாலும் பொதுவாக அவை கூட்டுத் தன்மை வாய்ந்தவை, (Collective) சமூகம் சார்ந்தவை. உளநோயினை ஆராய்ந்த பிராய்டு சமூக உறவில் ஏற்பட்ட பாதிப்பின் அறிகுறியாகவே மனிதனைப் பாதிக்கும் மன நிலையானது இருக்கிறது என்றார். அதனைச் சமன்படுத்தவே சடங்குகளை அவன் நாடுகின்றான் என்பார். சடங்கென்பது 'ஒன்றைச் செய்து இன்னொன்றை அடைவது' என்னும் சமூகவியல் ஏற்பாடாகும்.

சாவுச் சடங்குகள் நிகழ்த்துவதற்குமுன் கல்நாட்டிச் சடங்கு செய்தால் ஆவியின் ஒரு பகுதி அங்கு தங்குமெனவும், விழாக்காலங்களில் பழம்பிறப்புணர்வுடைய மேலோர் உலகிலுள்ள ஆவி இக்கல்லுக்கு வரும் என்ற நம்பிக்கை வழிபடுபவர்களுக்கு இருந்தது. நடுகல்லில் இறந்தோர் ஆவி புகுந்ததாக நம்பும்நிலை நடுகல் வழிபாட்டிற்கு வழிகாட்டியமையினை இதன் வாயிலாக ஓரளவு

உய்த்துணர முடிகின்றது. இறந்துப் போனவர்களுடைய ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம் எனவும் அது ஆக்க சக்தியாகவும் அழிவு சக்தியாகவும் வெளிப்படலாமென்பதும் கல்நாட்டியோரின் ஆழமான நம்பிக்கையாகும் (Vanamamalai, 1973).

## நடுகல்லும் சுவர்க்கமும்

இறப்பு மனிதவுடலை தெய்வமாக்குகிறது. இறந்த உடல் புனித உடலாகிறது. அவ்வுடல் மேல் உலகம் செல்வதாகிறது. இதனாலேயே ஒவ்வொரு நிலைமாற்றமும் சடங்கக் குறியீடாக, தோரணியாக மாறுகிறது (Bakthavathchala Bharathi, 2021). இறப்புக்குப்பின் உயிர் தொடர்ந்து வாழ்கிறது என்றும், நன்மை தீமைகளைச் செய்யும் ஆற்றலைக் கொண்டு அவை, நிலைத்திருக்கிறது என மக்கள் இன்றும் நம்புகிறார்கள் (Dhas, 2019).

எலிஸியம் என்பது இறந்த வீரன் புகும் சுவர்க்கம் எனவும் அது இவ்வுலகிலேயே உள்ளதென்றும் பண்டைய கிரேக்கர்கள் நம்பினர். அது போலவே பண்டைய ஜெர்மானியர், ரோமானியர், எகிப்தியர், சீனர், தமிழர் ஆகியோரும் சுவர்க்கம் என்ற கருத்தில் நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர் (Vanamamalai, 1973).

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்" (Parimelazhakar, 1950)

என்ற குறட்பாவில், சாதாரணப் போர்வீரன் நடுகல் சிற்பங்களில் தேவமங்கையரால் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வது போல காட்டப்படுவான் (Krishnamoorthy, 2004).

பன்னெடுங்காலந்தொட்டு இன்றுவரை தமிழகத்தில் பல்வேறு இந்து சமூக மக்களிடையே வாழ்வில் பெரும்பாவச் செயல்களை புரிவோர் 'நரகம்' செல்வதாகவும், மனித வாழ்வில் 'புண்ணியங்கள்' செய்வோர் 'சொர்க்கம்' செல்வதாகவும் ஓர் நம்பிக்கை இருந்து வருகின்றது. இதன் பொருட்டே பாவங்களை செய்தவர்கள் இந்துக்களின் புண்ணியத்தலங்கள் என்றழைக்கப்படும் காசி, இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்குச் சென்று வருகின்றனர்.

## முன்னோர் வழிபாடும் நடுகல்லும்

முன்னோர் வழிபாட்டையும் நடுகல் வழிபாட்டையும் ஒன்றாகவே கருதுவர் (Selvam, 1976). பழந்தமிழ் இலக்கியத்தில் குறிக்கப்படும் தென்புலத்தாரே நமது முன்னோராவர். இவரை 'பிதிரர்' என அழைக்கும் மரபு உண்டு. பிதிரராகிய முன்னோர்க்கு ஆற்றப்படும் சடங்கு 'பிதிர்கடன்' எனப்படும். இது முன்னோர்களின் நினைவாக அவரது சந்ததியினர் இறந்த முன்னோரது ஆவிக்குச் செய்யும் உண்பித்தலும் வழிபாடும் அடங்கிய ஒன்றாகும் (Krishna Iyer, 1968). முன்னோர்க்கு நடுகல் எடுத்தற்கான சான்று இலக்கியத்தில் சுட்டப்படவில்லை. எனினும் தென்புலத்தார் வழிபாட்டிலும் நடுகல் வழிபாட்டிலும் வழிபடுவோருக்கு உதவும் நிலையில் ஒன்றிணைந்த நம்பிக்கையே இரண்டையும் ஒன்றாகக் கருதும் போக்குக்கு காரணமாகலாம். நடுகல் வழிபாடு, வழிபட்டோர் அனைவருக்கும் உதவும் நிலையினதாக அமைவது (Devibooma, 2022). ஆன்றோர் வணக்கம், (Anceston Worship) உறவினர்க்கு உதவுதல் என்ற நம்பிக்கையடிப்படையில் அமைவதும் குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

## நடுகல்லும் - வடதிசையும்

வீரத்தைப் பாராட்டு முகத்தான் தோன்றிய நடுகல் வணக்கம் காலப்போக்கில் மனிதனின் பிறபண்புகளை பாராட்டும் நிலையினதாக அமைவதனை வடக்கிருந்தார் நடுகற்கள் தெரிவிக்கின்றன. நடுகல் எடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் ஆண்களுக்குரிய ஒன்றாகக் காட்டப்படுகிறது. நாடு காவல் செய்து, நல்லறம் பேணி, நாணிலம் போற்ற வாழ்ந்த நல்லரசன் கோப்பெருஞ்சோழன். அவன், தன்

நிலையில் தாழ்வு வந்துழி மானங்காக்க வடக்கிருந்து உயிர் நீத்ததனை அவனது நண்பனாகிய பொத்தியார்,

"பலருக்குநிழ லாகிய உலகமீக் கூறித்

தலைப்போ கன்மையிற் சிறுவழி மடக்கி

நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்

இடங்கொடுத் தளிப்ப மன்ற உடம்போடு

இன்னுயிர் விரும்பும் கிழமைத்

தொன்னட் புடையார் தம்முழைச் செலினே"

பாடலடிகளின் வழி நட்பிற்காக உயிர்துறக்கும் தன்னலங்கருதா நிலையை அறியமுடிகின்றது. பாரியின் பெரும்பிரிவு கபிலர் வடக்கிருத்தலுக்குக் காரணமாக அமைவதைக் கொண்டு மன்னர் புலவர் நட்பினை அறியமுடிகின்றது (Subramanian, 2009). நட்புக்கருதி வடக்கிருந்து நடுகல்லாகிய பிசிராந்தையாரைக் கண்ணாகனார் புகழ்ந்ததனை,

"பொன்னுந் திகிரு முத்து மன்னிய

மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச் சேய வாயினுந் தொடை புணர்ந்து

அருவிலை நன்கல மமைக்குங் காலை

ஒருவழித் தோன்றிபாங் கென்னுஞ் சான்றார்

சான்றோர் பால ராப

சாலார் சாலார் பாலராகுபவே"

பாடலடிகளைக் கொண்டு வடக்கிருந்தார் சிறப்பு வெளிப்படக் காண்கிறோம். இதன் நீட்சியாகவே தமிழகத்தின் பல மாவட்டங்களில் இன்றும் இறந்தவர்களைப் புதைக்கும் இடமான 'சுடுகாடு' வடக்கு திசையில் அமைந்திருப்பதனை அறியலாம் (Subramanian, 2009).

## பத்தினிப் பெண்டிரை தெய்வமாக்கல்

நடுகல் எடுக்கும் வழக்கம் சங்ககால சமூகத்தில் ஆண்களுக்குரிய ஒன்றாக இருந்ததனை அறியமுடிகின்றது. காலப்போக்கில் பத்தினிப் பெண்ணுக்கும் நடுகல் எடுத்துக் கடவுளாக்கிய நிலையினை முதன் முதலில் சிலம்பில்தான் காண்கிறோம். இதனை,

"பொற்கோட்டு இமயத்துப் பொருவது பத்தினிக்

கற்கால் கொண்டனன் காவலன் ஆங்கென்"

என்கிறார் அடிகளார், தொல்காப்பியர் காட்டும் நெறியில் நின்று கற்புடையக் கண்ணகிக்குக் கல்நாட்டிக் கடவுளாக்கிய புதுமையினைச் செய்து உலகரங்கில் புதியதோர் புரட்சியினை செய்துள்ளார் அடிகளார் (Adiyarkkunallar, 1968). இதனைக் காலத்தால் ஏற்பட்ட வழிபாடு மாற்றம் எனக் கொள்ளலே பொருந்தும். கணவனை இழந்த பெண்டீர் தீப்பாய்ந்து உயிர் நீத்தபின் அவர்களுக்குக் கல் நடும் வழக்கம் குறிப்பாக, தென்னிந்தியாவில் பரவலாகக் காணப்பட்டதெனினும் அதனை, இலக்கியங்கள் சுட்டவில்லையெனக் கூறி, அடிக்குறிப்பில் கண்ணகிக்குக் கல் நாட்டியதைச் சான்றாக்குகின்றார் (Hart, 1975). அவரின் கூற்றுப்படி, ஆராயும்போது சங்க காலத்தில் பெண்கட்கு நடுகல் எடுக்கும் நிலை இல்லாதிருந்தமை புலனாகிறது. கண்ணகிக்குக் கல் எடுத்து கடவுளாக்கியதை, 'கடவுள் வழிபாடு' என்ற நிலையில் நோக்கத்தக்கதேயன்றிக் கல்நடுதல் என்னும் சாவுச்சடங்கு என்ற அடிப்படையில் நோக்கத்தக்கதல்ல என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## நடுகல் வழிபாடு

தொல்காப்பியர் குறிப்பிடும் பெரும்படையே நாளடைவில் நாட்பலி காலை வழிபாடாகிறது. பின்னர் ஆண்டிற்கொருமுறை செய்யும் வழிபாடாக மாறுகிறது (Subramaniyan, 2004). நெல்லும் மலரும் தூவி தெய்வத்தினை வழிபடுமுறை பழந்தமிழ் மக்களின் வாழ்வியல் வழிபாட்டு முறையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் நடுகல் வழிபாட்டிலும் இத்தகைய முறையினை,

"புன்றலை சிதைத்த வன்றலை நடுகற்

கண்ணி வாடிய மண்ணா மருங்குற்

கூருளி குயன்ற கோடுமா யெழுத்து"

பாடலடிகள் மூலம் அறியலாம் (Subramaniyan, 2004). பல்வேறு சமயங்களின் எழுச்சி காரணமாகத் தமிழகத்தில் நடுகல் வழிபாடு மக்களிடையே சிறிது குறைந்தாலும் அடித்தட்டு மக்களிடையே பெரிய அளவில் மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. சமய நம்பிக்கையுடன் நடுகல் வழிபாட்டையும் மக்கள் பெருமளவில் இன்றும் மேற்கொண்டு வருகிறார்கள் (Faisul Rani, 2011).

## தீப்பாய்ந்தம்மன் (தீப்பாஞ்சி அம்மன்)

தாய் தெய்வங்களை முதன்மை தெய்வங்களாகக் கொண்ட திராவிடத் தெய்வங்களின் ஒட்டுமொத்தச் சடங்குகளின் அமைப்பியல் தோரணிகளை முழுதளாவிய (Holistic) நோக்கில் மீட்டுருவாக்கம் செய்ய முயன்றால் தாய்த் தெய்வங்கள் அனைத்தும் கொடூரமான ஆக்ரோஷத்துடன் ஆவேசமான நிலைகளில் அவை தெய்வமாக்கப்பட்டமையை நன்கறிய முடியும் (Bakthavathchala Bharathi, 2021). மகிஷாசூரனின் வக்கிரத்தை காளி அழித்தமை, ஜமதக்னியின் பால்வெறியால் பார்வதி கொடுமைக்குட்பட்டவை, மன்னன் பாண்டியனின் தவறான முடிவால், கணவன் கோவலனை இழந்து கண்ணகி கடுஞ்சினத்துடன் கூடல் மாநகரினை எரித்தமை போன்ற சமூக நிகழ்வுகள் ஆண்களின் தவறினைத் தொடர்ந்து தெளிவுறுத்துகின்றன.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலக்கட்டத்தில் பழைய தென்னாற்காடு (இன்றைய கடலூர்) மாவட்டம் சிதம்பரம் வட்டம் பூதங்குடியைச் சேர்ந்த சேத்தியார் குலப்பெரியவருடன், உடன்கட்டையேறி, உயிர்நீத்த நாயக்கர் இனப்பெண், பின் கல்நடப்பட்டு அக்குல மக்களால் தெய்வமாக வழிப்படப்பட்டாள். அந்நடுகல் தெய்வத்தின் மகிமையைக் காலப்போக்கில் அனைவரும் அறிந்த பின்னர், 1970-ஆம் ஆண்டுகளில் பெரியக் கோயில் ஒன்று கட்டப்பட்டு, பின்னர், அந்நடுகல் பெருந்தெய்வமாக மாற்றம் பெற்றது (Bakthavathchala Bharathi, 2021).

ஆண்களின் வக்கிரத்தால் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகித் தீயில் பாய்ந்தோ அல்லது ஆண் வக்கிரத்தை அழித்து, மானிடத்தன்மை விடுத்து, தெய்வீகத் தன்மையடைந்த எத்தனையோ பத்தினிப் பெண்கள் இன்று தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு இடங்களில் திறந்த வெளியிலும் ஆலயத்தினுள்ளேயும், மாரியம்மன், காளியம்மன், தீப்பாஞ்சியம்மன் எனப் பல்வேறு பெயர்களில் நடுகல்லாய் காட்சியளிப்பதனை இன்றும் காணமுடிகிறது.

## தீப்பாய்ந்தம்மனும் - சாபமும்

கற்புடைய பத்தினிப் பெண்கள் திருமணமாகா நிலையில் பேராற்றல் கொண்டவர்கள். அவர்கள் சீற்றமடைந்தால் கட்டுக்கடங்கா ஆற்றலை வெளிப்படுத்துபவர்கள். அழிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். பழந்தமிழர் வாழ்வில் இவர்களின் ஆற்றல் 'அணங்கு' என்ற வகையிலும் வெளிப்பட்டது (Bakthavathchala Bharathi, 2021).

"ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கெண்ப

மாய மகளிர் முயக்கு" (Parimelazhakar, 1950)

என்ற குறளில் 'அணங்கு'என்பது வருத்திக் கொள்ளும் தெய்வ மகள் என்பது பொருளாகும்.

"அணங்கே விலங்கே கள்வர் தம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே" (Ilampuranar, 1969)

இங்கு அணங்கென்பது அச்சத்தை விளைவிக்கக் கூடியது என்பது பொருள் கொள்ளப்படுகிறது.

தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் கற்புச் சோதனைக்கு ஆட்பட்டு, ஆண்களின் வக்கிரத்தால் தெய்வமாக்கப்பட்ட நிஜமான நிகழ்வுகள்தான் பலபெண் தெய்வங்களின் உண்மையான வரலாறாகும். தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்திற்குட்பட்ட தாசரஅள்ளி கிராமத்தில் 'துடும்புக்காரன்'என்பார். தன் (கொல்லையில்) நிலத்திலுள்ள புளியமரத்தடியில், தான் வாழ்ந்தக் காலம் முழுமைக்கும் 'தீப்பாஞ்சி அம்மன்' என்ற பெயரில் நடுக்கல் ஒன்றினை வைத்து, பூஜை செய்து, குறிச்சொல்லி, வழிபட்டு வந்ததாகவும், அவர் காலத்திற்குப் பின்னர் அவருடைய வழித்தோன்றல்கள் அந்நடுகல்லினை (தீப்பாஞ்சியம்மன்) சரியாகப் பராமரித்து பூஜிக்கவில்லை என்றும், அதன் காரணமாகவே அந்நடுகல்லின் கோபம் அதிகரித்து, அக்குடும்பத்தினைச் சேர்ந்த பெண்களில் பலர் தொடர்ந்து, இரண்டு, மூன்றுத் தலைமுறைகளாக, கணவன்மார்களை இழந்து, கைம்பெண்களாகக் (விதவை) காட்சியளிப்பதும், கவனிக்கத்தக்கதாகும். அக்குடும்பத்தினரை மட்டுமல்லாமல் தற்போது நூறு குடும்பங்கள் கொண்ட தாசர அள்ளி கிராமத்தில் பல இளம் வயது ஆண்கள் திடீர் திடீரென இறந்துபோவது புரியாத புதிராக இருந்து வருகிறது. தீப்பாய்ந்தம்மனே காலப்போக்கில் 'தீப்பாஞ்சியம்மனாக' பெயர் மாற்றமடைந்தது. (அக்குடும்ப ஆண்மகன் ஒருவனால் முன்பொரு காலத்தில் பெண்ணொருவர் பெரிதும் பாதிக்கப்பட்டு தீயிலே பாய்ந்ததாகவும் அப்பெண்ணின் சாபமே இத்தகைய அவலநிலைக்கு காரணமென்றும் அக்குடும்பத்தார் குறிப்பிடுகிறார்கள்). பெண் பாவம் பொல்லாதது என்பதும், பெண்ணின் சாபம் ஏழேழ் தலைமுறைக்கும் பாதிப்பினை உண்டாக்கும் என்பதையும் இதன் மூலம் அறியமுடிகிறது.

மிகக் கடுமையான ஒழுக்க நெறிகொண்டு கற்பைப் போற்றும் பத்தினித் தமிழ்ப் பெண் எல்லையில்லா ஆற்றலைப் பெற்றவள். மதுரையை எரித்த கண்ணகி முதற்கொண்டு கற்புக்குச் சந்தேகம் வந்த போதெல்லாம் தீயில் நுழைந்து தெய்வமான தீப்பாய்ந்தம்மன்கள், திருமணமாகாத கன்னித் தெய்வங்கள், காளி தேவித் தெய்வங்கள் வரை இவர்கள் எவ்வளவு ஆற்றல் படைத்தவர்கள் என்பதும் நாம் புராண, வாய்வழி வழக்காறுகள் வாயிலாக அறிந்தவையே.

## நடுக்கல்லும் - பலியிடுதலும்

மானிட உளவியல் அறிஞரான சிக்மண்ட் பிராய்டு, குலக்குறியும் விலக்கும் என்னும் நூலில் குலக்குறி உயிர்ப்பலிச் சடங்கென்பது ஆதிகாலத்தில் ஏற்பட்ட தொல்படிவத் தந்தைக் கொலையை (Primodial Patricide) மீண்டும் நிகழ்த்துதல் ஆகும் என்கிறார் (Totem and Taboo, 1912). சடங்கில் தொல் மூலப்படிவக் குறியீடுகள் (Archetypal Symbols) வெளிப்படும் என்பதை உளப்பகுப்பு வழியில் அறிய இயலும் என்பது கூடுதல் புரிதலாக அமைகிறது (Bakthavathchala Bharathi, 2021). அம்மன் ஆக்ரோசத் தளத்திலிருந்து கோயில் என்னும் தளத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கு அம்மனின் பல்வேறு நிராசைகள், உந்துதல்கள் தணிக்கப்படுகின்றன. திருவிழாவின்போது ஆண் வக்கிரங்களை உயிர்ப் பலிகள் மூலம் அழித்தல், பொங்கலிடுதல் மூலம் வெளிப்படுத்துதல், உடல் வருத்தும் பிரார்த்தனைகள் செய்தல் (அங்கப்பிரதட்சணம், தீ மிதித்தல், செடல் குத்துதல், அலகு குத்துதல்) போன்றவை அம்மனைத் தணிக்கும் செயல்பாடுகளாகும் (Bakthavathchala Bharathi, 2021).

தமிழ்ப் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் தந்தைத் தலைமைச் சமூகத்தில் ஆண் வக்கிரத்தின் ஒடுக்குதல் குறியீடாய்ப் பெண்கள் மாறினர். சமூக ஒடுக்குதலில் ஆவேச நிலையில் தெய்வமடைந்த பெண்கள் ஒடுக்கப்பட்ட தங்களின் ஆழ்மன வெளிப்பாடாக ஆண் குறியீடுகளை உயிர்ப்பலிகளாகப் பெற்றனர்.

தாய்த் தெய்வங்களாக மாறிய பெண்களே, பல்வேறு சடங்கு நிகழ்ச்சிகள் மூலமாக - தங்களுக்கு எதிரான ஆண் வக்கிரங்களை அழிக்கும் நிலையில் எழுந்தவையே ஆண் குறியீடுகளைக் கொண்ட

உயிர்ப் பலிகள் ஆகும். (ஆண்மகன்) நரபலி, ஆண் எருமை (எருமைக் கிடா), ஆண் பன்றி, ஆண் ஆடு (ஆட்டுக்கிடா), சேவல் என்ற வர்சையில் ஆண்கள் குறியீடாய் பலி கொள்ளப்பட்டனர் (Bakthavathchala Bharathi, 2021).

## காளியம்மனும் - எருமைக்கிடா பலியும்

'காளி'என்னும் சொல் திராவிட மூலத்தைக் கொண்டதாகும். கருப்பு என்னும் பொருளுடைய 'கார்' என்பதிலிருந்து திரிந்ததே 'கால்' ஆகும். கருப்பு என்பது அச்சம், குழப்பம், பயங்கரம், முடிவற்றது, புரியாத புதிர் ஆகியவற்றின் குறியீடாக விளங்குவது. அச்சத்தையும் சீற்றத்தையம் கொண்டுள்ள இத்தெய்வமானது கால்கார் என்னும் வண்ணத்தாலேயே உருவகப்படுத்தப்பட்டது. கால் என்னும் சொல்லுக்கு இணையான ஆண்பால் காலன் ஆகும். 'காலன்' இறப்புக்குரிய தெய்வமாகும். கால் என்றால் 'காற்று', 'அசைவு' என்ற பொருளும் உண்டு. தொல்குடியினர் இடி, மின்னலோடு கூடிய காற்றின் பயங்கரமான ஆற்றலைப் புரிந்து கொள்ள முடியாத புதிராக இதை உணர்ந்திருக்கக்கூடும். இதனாலேயே 'காத்து-கருப்பு' என்று இன்றுங்கூட நிலவும் வழக்கானது காற்றுத் தொடர்புடைய தீய ஆவிகளைக் குறிப்பதாக உள்ளது (Gothandaraman, 1997).

தமிழகத்தில் அதிகமாக நடுகல் கண்டெடுக்கப்பட்டு, அந்நடுகல்லிற்காக அகல் வைப்பகம் அமைக்கப்பட்டுள்ள தர்மபுரி மாவட்டத்தில், பல்வேறு கிராமங்களில், ஊருக்கு ஒதுக்குப்புறம்பான பகுதிகளில், திறந்தநிலையில் ஏரிக்கரையோரங்களில், பல்வேறு வகையான முல்லை நில மரத்தடியில் பெண்ணுருவில் உள்ள நடுக்கற்களுக்கு 'காளியம்மன்' எனப் பெயரிட்டு, ஆண்டுதோறும் தவறாமல், தை, மாசி அல்லது சித்திரை மாத வளர்ப்பிறை நாட்களில் புதன், வியாழன் என இருதினங்களில் ஊர்மக்கள் ஒன்றுக்கூடி ஊர் திருவிழாவாக நாற்பது, ஐம்பது ஆண்டுகளாகக் கொண்டாடி வருகிறார்கள். சரியாக, நேரம் பிற்பகல் 12-30 அல்லது 1-30 மணிக்குள் அம்மன் ஆலயத்திற்கு முன்னுள்ள பலிபீடத்தில், பத்திற்கும் மேற்பட்ட ஆண் எருமைகளை பலி கொடுக்கிறார்கள். நடுகல்லாகக் காட்சியளிக்கும் காளியம்மனின் ஆக்ரோசத்தை இந்நிகழ்வு தணிக்கும் என்றும், ஊரில் எவ்வித கெட்டநிகழ்வுகளும் நிகழாது என்றும் அப்பகுதி மக்கள் குறிப்பாக, மொரப்பூர் ஒன்றியத் தலித் மக்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்விழாவானது இன்றளவும் தர்மபுரி மாவட்டத்தில் வெகு விமரிசையாக குறிப்பாக, மொரப்பூர் ஒன்றியத்திற்கு உட்பட்டப் பகுதிகளில் தற்போதும் நடைபெற்று வருவது கவனிக்கத்தக்கதாகிறது.

## நடுகல்லும் படைத்தலும்

இறந்தோருக்குத் திதி கொடுக்கும் (நினைவு நாள்) சடங்கு மாசி மகத்தன்று்மகாளய அமாவாசையன்று நிகழ்த்தப்படுவது நினைவுக்கூரத்தக்கதாகும். ஈமச் சடங்கென்பது ஒருவகையான பலியாகவும் கருதப்படுகிறது (Beri, 1981).

நடுகற்குப் படைத்தலென்பது அவர்கள் விரும்பிய பயன்கொண்ட பொருளாகலாம் என்பது நினைத்தற்குரியது. இன்றைய நடைமுறையில் இறந்தோர்க்குப் படைத்தலில் அவர்கள் விரும்பிய, பயன்படுத்திய பொருட்கள் இடம்பெறுநிலை நடுகற்குப் படைத்தலோடு ஒத்து நோக்கத்தக்கது. நடுகல்லுக்கு நாட்பலி செய்தல் வழக்கமாக இருந்தது என்பதை,

"நடுகற் பீலிசூட்டி நாரரி

சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லே" (Subramanian, 2009)

என்று ஔவையார் அதியமானுக்கு நாரரி சிறு கலத்துக் 'கள்' படையல் தந்ததை இப்பாடலடிகள் வாயிலாக அறியமுடிகிறது. சோற்றிலிருந்து தயாரிக்கப்படும் தோப்பிகள் நடுகல்லுக்குப் படைக்கப்பட்டது. தற்போது மத்திய பிரதேசத்தில் மத்திய இனக்குழுவினரும் குஜராத் மாநிலத்தில், ராத்வா இனக்குழுவினரும் நினைவுக் கற்களுக்கு ஒருவகை மதுவை (லண்டா என்று பெயர்) வைத்தும் படைக்கின்றனர் (Krishnamoorthy, 2004). தற்பொழுது தமிழகமெங்கும் போகிப் பண்டிகை அன்று இறந்தவர்களுக்கு மிகவும் பிடித்த பொருள்களை படையலாக (பீடி, சிகரெட், சாராயம், வடை, முருக்கு,

துணி) வைத்து வழிபாடு செய்து வருகிறார்கள். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மக்கள் சுடுகாட்டிற்குச் சென்று அங்குள்ள இறந்தவர்களுடைய சமாதிகளையும், புதைத்த இடத்தினையும் சுத்தம் செய்து குடும்பத்துடன் வணங்கி வழிபாடு செய்துவருகின்றார்கள்.

## நடுகல்லும் சிறுதெய்வ வழிபாடு தோற்றமும்

'சிறுதெய்வம்' என்னும் சொல்லாட்சி முதன் முதலில் 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பர் தேவாரத்தில் 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்று பயின்று வருகிறது. இவ்வழக்கானது 'மேலோர் மரபு' சார்ந்ததாகும் (Paramasivam, 2021).

'பெருந்தெய்வம்' என்னும் சொல்லாட்சி

"இருபெருந் தெய்வமும் உடன் நின்றா அங்கு

உருக்கெழு தோற்றமொடு உட்குவர விளங்கி"

இப்புறநானூற்றுப் பாடலடிகளில் பயின்று வருவதனை அறியலாம் (Subramanian, 2009).

காஞ்சி காமாட்சியம்மன் சிறுதெய்வ மரபிலிருந்து பெருந்தெய்வ மரபிற்கு மாறிய தெய்வமே (Paramasivam, 2021). இக்கருத்தினை நோக்கும்போது பெருந்தெய்வங்கள் அனைத்தும் சிறுதெய்வ மரபிலிருந்து மாறியதாக இருக்கலாம்.

"கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்

பல்லாளே ஆய மகள்"

என்ற நிலையில், தமிழ்ப் பெண்கள் வீரர்களை விரும்பி, வீரமில்லாதவர்களை வெறுத்தனர். கொல்லேறு தழுவுதல் என்ற காளையை அடக்குதல், புலி முதலிய விலங்குகளைக் கொல்லுதல், போரில் வீரர்களை, யானைகளை, குதிரைகளை அடக்குதல் யாவும் வீரச்செயலாகக் கருதப்பட்டன. வீரமரணம் எய்தியவருக்கு நடுகல் உருவாக்கி வழிபடும் மரபு உருவாயிற்று (Subramanian, 2009). மதுரை வீரன், நொண்டி காடன், சப்பாணி, அண்ணன்மார், பட்டவன் போன்றோர் வீரர்களாக இருந்தவர்கள். பின்பு நடுக்கற்களாகி நாட்டுப்புறத் தெய்வங்களாக அதாவது, சிறுதெய்வங்களாக மாறினார்கள் (Krishnamoorthy, 2004).

## நடுகல்லும் நம்பிக்கையும்

நடுகல்லை வழிபட்டு வேண்டியதைப் பெறலாம் என்ற நம்பிக்கை நிலவியதனை அள்ளூர் நன்முல்லையார், இல்லறத்தை நல்லறமாக்க விழையும் பெண்ணொருத்தி நடுகல்லைத் தொழுது விருந்தெதிர் கோடலைத் தருமாறு வேண்டி வழிபட்டமையை,

"களிறு பொரக்

ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை

நடுகற் கை தொழுது பரவு மொடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே"

விளக்கிச் சென்றுள்ளார் (Subramanian, 2009). இங்கு நடுகல் வேண்டியதை அளிக்கும் இறைத்தன்மை பெற்ற ஒன்றாகக் கருதப்பட்டமை வெளிப்படுகிறது. நடுகல்லைத் தொழுதால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடையே நிலவியதனை, நடுகல்லைத் தொழாது செல்லுமாறு இரவலனுக்கு அறிவுறுத்தும் நிலையில் அமைந்த பாடலில்,

"பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்

றொழாதனை கழித லோம்புமதி

வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்

கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே”

தொழுது போகவே கொடுங்கானம் மழை பெய்தலால் எனச் சுட்டப்பட்டுள்ளது. எனவே, நடுகல் வழிபாடு என்பது சங்ககாலச் சமூகத்தில் தெய்வ வழிபாட்டின் தன்மையினைக் கொண்டிருந்தது என்பதை மேற்குறித்த இலக்கியச் சான்றுகள் உறுதிசெய்கின்றன (Subramanian, 2009).

## நடுகல்லும் - வழிபாட்டு மரபுகளும்

ஒரு குறிப்பிட்ட விலங்கு, தாவரம் (குலக்குறி), இயற்கைப் பொருள், ஆவி, முன்னோர், முனிவர், நடுகல் ஆகிய எந்தவொன்றின் ஆற்றல் மீதும் கொண்டுள்ள அனைத்து வகையான நம்பிக்கைகளும், சடங்குகளும், வழிபாடும் சேர்ந்ததே வழிபாட்டு மரபாகும். அவர்கள் தெய்வீக அருளைப்பெற்ற அரசர்கள் (Divine Kings), மழை தருவிப்பவர்கள், புனிதத் தலைவர்கள் தனித்த வழிபாட்டு மரபை ஏற்படுத்துபவர்களாகவோ அந்த வழிபாட்டு மரபின் கீழ் ஓர் அங்கமாக அமைந்து, போற்றுதல்களையும் வணங்குதல்களையும் பெறக்கூடியவர்களாகவோ இருக்கலாம் (Bakthavathchala Bharathi, 2021).

இவ்வகையில் காஞ்சி சங்கராச்சாரியார், புட்டபர்த்தி சாய்பாபா, ஜீயர்கள், மடாதிபதிகள், ஆதினங்கள், முனிவர்கள், பங்காரு அடிகளார், சினிமா நடிகர்கள் போன்றோர் தனித்தன்மைகளைக் கொண்டுள்ளனர். இன்று சிலைகளாகக் காட்சித்தரும் அரசியல் தலைவர்கள் இன்னும் ஓர் நூற்றாண்டில் கடவுளாகக் காட்சிப் படுத்தப்படலாம்.

வழிபாடு செய்பவர்கள் கோயிலும், மதிலும், ஏனைய சிறப்புகளும் படைப்பார்கள். இப்படி அமைந்த வீரகற்களை வழிப்போவோர் கும்பிட்டுச் செல்வர். வள்ளலை நாடி நிறையவே பரிசில் பெற்று வந்த ஒரு புலவன் பரிசில் பெறச் செல்லும் புலவனிடம் உன்னுடைய துன்பம் மிகுந்த சுற்றத்தோடு அந்த நடுகல் வீரனுடைய புகழைப் பாடிப் பிறருக்கு நிறையக் கொடுத்து அவனுடைய கல்லைத் தொழுது செல்வாயாக பாணனே! அவன் எட்டுத் திசைக்கும் தெய்வமாக அந்தக் கல்லில் இடம்பெற்றிருக்கின்றான் என்பதனை,

“ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென

நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்

செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட மாலை”

மலைபடுகடாம் கூறுகிறது (Subramanian, 2009).

“கல்லெறிந்து எழுதிய நல்லரை மரா அத்த

கடவுள் ஓங்கிய காடுஏசு கவலை

ஒட்டாது அகன்ற ஒன்னாத் தெவ்வர்”

நீங்கள் போகும் இடங்களில் வீரனின் பெயர் தெரியுமாறு கல்லினை அகழ்ந்து எழுதிய தெய்வத்தன்மை பொருந்திய நடுகற்கள் என்று குறித்துள்ளதனை அறியமுடிகிறது (Subramanian, 2009). நடுகற்கள் பெரும்பாலும் ‘வேடியப்பன் கோயில்’ என்றே மக்களால் அழைக்கப்படுகின்றன (Krishnamoorthy, 2004). மண்ணிற்காகவும், மானத்திற்காகவும் பல்வேறு வீரச்செயல் செய்த வீரர்களுக்காகவும் எடுக்கப்பட்ட நடுக்கற்களின் பரிணாம வளர்ச்சியே இன்று நாடாண்ட தலைவர்களுக்காக எடுக்கப்படும் சிலைகளும், நினைவு மண்டபங்களும், சமாதிகளுமாகும்.

## முடிவுரை

ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரன், மண்ணையாண்ட மன்னன், புலியைக் கொன்றவன், யானையைக் கொன்றவன், பன்றியைக் கொன்றவன், ஊரைக் காவல் செய்தவன், பெண்ணை

பாதுகாத்தவன், ஆண்களை எதிர்த்துப் போராடித் தீயிலே மாண்ட, ஆண்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் போன்றோரின் வீரத்தினைப் போற்றும் வகையில் நடப்பட்ட நடுகற்கள். இன்று மக்களிடையே பல்வேறுவகையான மூடநம்பிக்கைகளை ஏற்படுத்தி, நடுகல் பற்றிய உண்மையான வரலாற்றினை எடுத்துரைப்பதை விடுத்து, எதிர்வரும் தலைமுறையினரை தவறான திசையில் கொண்டுசெல்வது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். இத்தகைய செயலானது, நடுக்கல் பற்றிய உண்மையான வரலாற்றினை இன்றைய தமிழ் மக்கள் அறிந்துகொள்ளாமலேயே போவதற்கும் வழிவகை செய்துவிடும். உலகில் எத்தனையோ பண்பட்ட இனங்களெல்லாம் தங்களுடைய வரலாற்றை எழுதுவதற்கு கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நடுகற்கள் போன்ற ஆய்வாதாரங்களெல்லாம் கிடைக்காமல் திண்டாடிவரும் நிலையில், நம் தமிழ் நிலத்தில், பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட உன்னதமான நடுகற்களின் உண்மையான வரலாற்றினை, அடுத்த தலைமுறையினர் அறிந்துகொள்ளும் பொருட்டு, ஆட்சியாளர்களும், கல்வியாளர்களும் கற்கும் மாணவச் சமூகத்திற்கு, நடுகல் பற்றிய உண்மையான வீர வரலாற்றினை அறியப்படுத்துதலோடு, எதிர்வரும் காலத்தில் நடுகல் பற்றிய பல விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

## References


Bakthavathchala Bharathi, (2021) Tamilar Maanidaviyal, Adaiyalam Veliyedu, Karuppur Salai, Puththantham, Tamilnadu, India.

Devibooma, K. (2022) Records of Hero Stone in Sangam Literature, International Research Journal of Tamil, 4(SPL 2), 302-307. https://doi.org/10.34256/irjt22s247

Dhas, G.V. (2019) Worship of hero stone in the Sangam literature, International Research Journal of Tamil, 1(1), 59-65. https://doi.org/10.34256/irjt1914

Faisul Rani, N. (2011) Nadukkal Nampikkaigal, National Conference of Tamil, Viveganandha Arts and Science College, Trichankodu, Tamilnadu, India, (1) 336-340.

Ilampuranar, (1969) Tholkappiyam Porulathikaram, Thenninthiya Saiva Siththantha Noor Pathippu Kazhagam, Thirunelvelli, Tamilnadu, India

Krishnamoorthy, S. (2004) Nadukarkkal, Meyappan Pathippagam, Chidambaram, Tamilnadu, India.

Subramanian, S.V. (2009) Pattum Thogaiyum, Meyappan Pathippagam, Chidambaram, Tamilnadu, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License